*World ChristianFellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர்*
# *பாடம் 12 சிறந்த தலைவனின் பலவீனம்*

***கலாத்தியர் 2:11-14, 11. மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு***
***வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான்***
***முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்.12. எப்படியெனில்,***
***யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன்***
***புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ,***
***விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்.***
***13. மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்;***
***அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்.***
***14. இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி***
***சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும்***
***முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது***
***என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக***
***நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க,***
***புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர்***
***எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?***

*என்னுடைய இளம் வயது முதல், நான் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன்பே மிகப்பிரபலமான எல்லா துறைகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கை சரித்திரங்களை படிப்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. நான் கிறிஸ்தவனாக மாறிய பின்பு மிஷினரிகளின் வாழ்க்கை சரித்திரங்களை வாசித்து உள்ளேன்.*

*நாம் என்ன செய்ய வேண்டும்?*
*என்ன செய்ய கூடாது?*

*என்று பிறரின் வாழ்க்கை மூலம் கற்றுக்கொள்ளலாம்.*

*நம்முடைய வாழ்க்கையில் நாம் தவறு இழைத்து அதிலிருந்து கற்றுக்கொண்டு சரி செய்வதை விட மற்றவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட தவறுகளை பார்த்து நம்மை சரி செய்து கொள்வது மிக எளிது.*

*என்னுடைய வேலை காரியங்களிலும் கூட ஒரு தொழிலை எப்படி நடத்த வேண்டும், எப்படி நடத்த கூடாது என்று என் அனுபவத்திலும் மற்றவர்களின் அனுபவத்தின் மூலமும் நிறைய கற்றுக்கொண்டேன்.*

***எபிரெயர் 13:7, தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்***

***எபிரெயர் 6:11, நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களுமாயிருந்து***

*வேதம் நமக்கு கற்பிக்கிறது,*
*தலைவர்கள் நமக்கு கற்பிக்கிறார்கள்,*
*அனுபவம் கற்று தருகிறது மற்றும்*
*மற்றவர்களுடைய வாழ்க்கை நமக்கு பாடம் கற்பிக்கிறது, நம்மை ஊக்குவிக்கிறது.*

*பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ மிஷனரி இயக்கம், மிஷனரி சுயசரிதை மூலம் நிலைத்திருக்கிறது.*

*சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களின் "No one Else"(**நீ இல்லாவிடில்** என்கின்ற தலைப்பில் தமிழில்) என்ற வாழ்க்கை சரிதத்தை நீங்கள் வாசித்தது இல்லை என்றால் நீங்கள் அதை படிக்கும்படி நான் உங்களுக்கு பரிந்துரை செய்கிறேன்.*

***நீதிமொழிகள் 13:20, ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்***

*இயேசு ஒரு மனிதனை தன்னுடைய ஆவி, ஞானம், வல்லமை மற்றும் அன்பின் மூலம் ஆட்கொள்வாரானால், அந்த மனிதனுடன் நெருக்கமாக உள்ளவரிடமும் அந்த ஆளுமை கிரியை செய்யும்.*

## ***பர்னபாஸ்***

*கிறிஸ்தவ வாழ்க்கை சரிதத்தின் வல்லமை மற்றும் மதிப்பு அது தான், அதே போல் பர்னபா என்ற மனிதனை பற்றி படிப்பதும் மதிக்கத்தக்கது ஆகும், அவர் "ஒரு நல்ல மனிதர், பரிசுத்த ஆவியினால் மற்றும் விசுவாசத்தால் நிறைந்தவர்".*

***அப்போஸ்தலர் 11:24, அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்***

***அப்போஸ்தலர் 4:36** ல் பார்க்கிறோம், பர்னபாஸின் உண்மையான பெயர் யோசேப்பு, அப்போஸ்தலர்கள் அவரை பர்னபாஸ் என்று அழைத்தனர், ஏனென்றால் அந்த பெயருக்கு "ஆறுதலின் மகன்" என்று அர்த்தம் ".*

***யார் ஒரு சிறந்த கிறிஸ்தவ தலைவர்?***

*பலர் உள்ளனர். ஆனால் ஒரு வரையறையை நான் கொடுக்க விரும்புகிறேன், இது அனைத்தையும் ஒரு அளவிற்கு சுருக்கமாகக் கூறுகிறது.*

***கிறிஸ்துவின் சாயலாக மற்றவர்களை உருவாக்குபவரே கிறிஸ்தவ தலைவர் ஆவர்.***

***அப்போஸ்தலர் 11:22-24, 22. எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவ அனுப்பினார்கள்.23. அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்.24. அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந் தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.***

*அந்தியோகியாவில் உள்ள தேவாலயத்தில் ஒரு தேவை இருந்தது. சபை பர்னபாவிடம் போதிய வரங்கள் இருப்பதை அறிந்து அவரை அனுப்பி வைத்தது, அவரும் விருப்பத்துடன் சென்றார்.*

*பர்னபா தேவன் காட்டும் எந்த இடத்திற்கும் செல்ல தயாராய் இருந்தார், சபை நடத்தும் வழியில் மற்றும் பாதையில் செல்ல தன்னை அர்ப்பணித்தார்.*

*மேலும் சபையில் உள்ள குறைபாடுகளை தாண்டியும் காரியங்களை பார்க்க அவரால் முடிந்தது. அந்தியோகியாவில் உள்ள சபை இப்பொழுதுதான் நிறுவப்பட்டுள்ளது, தேவ கிருபையை காண துவங்கியுள்ளது.*

*பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் உள்ள தேவ கிருபையின் அடையாளங்களை எல்லாராலும் காண முடியாது, குறிப்பாக புதிதாக வந்த பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் உள்ளதை ஆனால் பர்னபாவில் பார்க்க முடிந்தது.*

***அப்போஸ்தலர் 9:26, சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்.***

*வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள தலைவர்களை உருவாக்குபவர்கள், நம்பிக்கையான தலைவர்கள் உருவாக எந்த ஒரு சவாலையும் எதிகொள்ள தயாராக இருப்பார்கள்.*

***சவுலிற்காக இங்கு ஆபத்தை சந்திக்க யாரேனும் உள்ளனரா? சிறந்த தலைவர்களை உருவாக்கும் திறமை இவருள் உள்ளதை யாரேனும் காண முடிந்ததா?***
*ஒரு மனிதர் இந்த சவாலை சந்திக்க முன்வந்தார்.*
*எல்லோரும் பயந்தபோது ஒரு மனிதர் மட்டும் தன் தலையை வெளியே நீட்டி நான் உள்ளேன், சவுலிற்கு சந்தர்ப்பம் கொடுக்க என்றார் அவர் வேறு யாருமில்லை, பர்னபாஸ் தான்*

*அந்தியோகியாவில் பர்னபாவின் ஊழியம் மிகவும் வெற்றிகரமாக இருந்தது, சபையும் வளர்ந்தது.*
***ஒரு சாதாரண நபரின் மனதில் என்ன இருந்து இருக்கும்?***

- ✓ *நான் இப்போது ஒரு மரியாதைக்குரிய தலைவர்.*
- ✓ *எனது பணிக்கு நல்ல பெயரைப் பெற்றுள்ளேன்.*
- ✓ *நான் ஆதாயப்படுத்தினதை ஒருங்கிணைக்கும் நேரம் இது.*

- ✓ *சிரியாவின் இந்த பகுதியில் என்னை ஒரு முக்கிய போதகராக நிலைநிறுத்த வேண்டிய நேரம் இது.*

***ஆனால் பர்னபா என்ன செய்கிறார்?***

*தனது சொந்த வெற்றியைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, ஒரு கூட்டாளரைத்/சக ஊழியரை தேடுவதற்காக அவர் ஊரை விட்டு வெளியேறுகிறார்!*

*அந்த கூட்டாளி இவருக்கு நன்றாக அறிமுகம் ஆன ஒருவர், நன்றாக மாறும் தலைவர், இவரை விட நன்றாக பிரசிங்கிப்பவர் அவர் பெயர் தான் சவுல்.*

***அப்போஸ்தலர் 11:25–26, 25. பின்பு பர்னபா சவுலைத் தேடும்படி, தர்சுவுக்குப் புறப்பட்டுப்போய், அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டு வந்தான்.26. அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று*.**

*அதனால் பர்னபா சவுலை காண தர்சுவுக்கு செல்கிறார், அவரை கண்டுபிடித்த பின்பு அவரை அந்தியோகியாவுக்கு அழைத்து சென்றார். ஒரு வருடம் முழுமையாக சபையை சந்தித்து நிறைய மக்களுக்கு கற்பித்தனர்.*

*சவுலின் வாழ்க்கையில் இப்படி ஒரு சிறந்த முதலீட்டை செய்து, சபை வரலாற்றில் தனக்கு என இரண்டாம் இடத்தை பர்னபா தக்கவைத்து கொண்டார்.*

## பேதுருவும் பர்னபாவும்
***கலாத்தியர் 2:11–14.***

*பேதுரு எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு வருகிறார், கிறிஸ்தவத்தில் அவருக்கு கிடைத்த சுதந்திரத்தை புறஜாதியினருடன் அமர்ந்து உண்ணுவதன் மூலம் அனுபவிக்கிறார். ஆனால் எருசலேமில் உள்ள சபையிலிருந்து கண்டிப்பான குழு ஒன்று வருகிறது, அவர்கள் இப்படிப்பட்ட சுதந்திரத்தை ஒருபோதும் அனுமதிப்பது இல்லை.*

*அந்த குழுவிற்கு பேதுரு, உடன் இருந்த யூதர்கள் மற்றும் பர்னபாவின் பதிற்செயலானது பவுலினால் கொஞ்சமும் ஏற்றுக்கொள்ளக் கூடாததாய் இருந்தது.*

*பேதுரு மற்றும் பர்னபாவின் நடத்தை புறஜாதியினருக்கு உண்மையான கிறிஸ்தவனாக வேண்டுமானால் யூதர் போலவே ஆகவேண்டும் என்றார் போல் ஒரு கட்டளையை விடுப்பது போல் இருந்தது.*

***இதனால் பாதிக்கப்படுவது எது?***
*சுவிசேஷத்தின் உண்மை!*
***வ14.இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?***

*உண்மையான சுவிசேஷத்திற்கு முரண்பாடான செயல்கள் பல உள்ளன அவைகளை ஒருபோதும் சகித்துக்கொள்ள கூடாது.*

*பவுலிற்கு நன்றாக தெரியும் சத்தியம் சீர்குலைந்தால் சுவிசேஷமும் சீர்குலையும்.*
*சுவிசேஷம் சீர்குலைந்தால் மனிதர்களின் ஆத்துமா அழிந்து விடும்.*
*இந்த உண்மை சிதைக்கப்பட்டால் மக்களின் வாழ்க்கை பாதிக்கும் என்பதை பவுல் மறக்கவில்லை. இது தான் பவுலின் பலம்*

## ***பர்னபாஸின் பலவீனம்***

*பேதுருவும் பர்னபாவும் தவறு செய்தனர்.*
*சுவிசேஷத்தின் உண்மையை மீறினதாக அவர்களின் நடத்தை இருந்தது.*

***இந்த பிழையில் பர்னபா ஏன் பங்குபெற்றார்?***
*எருசலேமிலிருந்து வந்த சில மனிதர்கள் பேதுருவும் பர்னபாவும் தங்களின் விருப்பம் போல் நடந்துகொள்ள வேண்டும், சுவிசேஷத்திற்காக அதன் சுதந்திரத்திற்காக நிற்க கூடாது என எதிர்பார்த்தது ஏன்?*

*சிறந்த தலைவனின் பலவீனத்தை இங்கு தான் காண முடியும்.*

### ***1. சிறந்த பரிசுத்தவான்களும் விழுந்து போவார்கள்***

*லீஸ்திராவில் பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்து கொண்டு இருக்கும்போது நடந்த ஒரு காரியத்தை காண்போம்.*

***அப்போஸ்தலர் 14:8-18,***

*வ 11,* ***பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷ ரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி***

*தேவர்கள் இறங்கிவந்திருக்கிறார்கள்.*

*வ 12,* ***பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்***

*அவர்களின் தெய்வங்களின் பெயரை இவர்களுக்கு சூட்டினார்கள்.*

*வ 13,* ***அல்லாமலும் பட்டணத்துக்குமுன்னே இருந்த யூப்பித்தருடையகோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்***

*நீங்கள் அவ்விடத்தில் இருந்து இருந்தால் என்ன செய்து இருப்பீர்கள்?*

*வாழ்க்கையில் உங்கள் மேல் உள்ள அழைப்பையும் உங்களில் கிரியை செய்யும் வரங்களையும் மக்கள் அங்கீகரிப்பது என்பது மிக சிறந்த அற்புதமான காரியம்.*

*வ* ***14-15, 14. அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்15. மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்.***

*பவுல் தன்னையும் பர்னபாவையும் விக்ரகமாக்காதீர்கள் என்று எச்சரித்து உரத்த சத்தமாய் மிக தெளிவாக பேசுகிறார். பவுல் சொன்ன காரியம் எல்லா மனிதர்களின் வாழ்க்கையிலும் முத்தரிக்கப்பட்டது போல் இருக்க வேண்டும்.*

*மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?*
*நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே.*

*பவுல் தன்னை ஒரு பாவி என்றும் தான் இன்னும் பரிபூரணம் பண்ணப்படவில்லை என்பதையும் அறிக்கை செய்கிறார்.*

***பிலிப்பியர் 3:12, நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்***

***1 தீமோத்தேயு 1:15, பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்.***

*ஆனால் இங்கு பர்னபாவும் பேதுருவோடு இனைந்து தவறு செய்தார்.*

*சிறந்த பரிசுத்தவான்களும் தவறு செய்து இருக்கிறார்கள் அது பர்னபாவாய் இருக்கலாம் பவுலாய் இருக்கலாம். வேதாகமம் உண்மையும் நேர்மையுமாய் இருந்து மிக சிறந்த பரிசுத்தவான்களின் தவறுகளையும் சுட்டி காட்டி இருப்பதால் தேவனுக்கு மகிமையையும் நன்றியையும் செலுத்துவோம்.*

## *2.* தேவனோடு எப்போதும் இருந்து...சரியான முடிவுகளை எடுத்தல்.

*நம்முடைய தினசரி வாழ்க்கையில் நாம் நிறைய சரீரரீதியான மற்றும் ஆவிக்குரிய முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது. ஊழியமும் அதேபோல் நிறைய முடிவெடுக்கும் சவால்களை கொண்டது.*

*உங்கள் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளிலும் வேதத்தை சார்ந்து தான் முடிவெடுக்க வேண்டும் என்ற அவசியம் உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம் என்பது வெளிப்படையாக உள்ளது.*

***அப்போஸ்தலர் 15:36,***
*முதலில் இதன் பின்னணி என்னவென்று காண்போம்.*

***யோவான் மாற்கு John Mark***

***அப்போஸ்தலர் 12:25, பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றினபின்பு மாற்கு என்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக்கொண்டு எருசலேமைவிட்டுத் திரும்பி வந்தார்கள்.***

*சவுலும் பர்னபாஸும், யோவான் மாற்கு என்னும் வாலிபனை கூட்டிக் கொண்டு எருசலேமிலிருந்து அந்தியோகியாவிற்கு செல்கின்றனர் என்று நாம் பார்க்க முடியும்.*

*மாற்குவின் தாயார் பெயர் மரியாள், அவர்களுக்கு எருசலேமில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில் தான் சீஷர்கள் கூடி ஜெபித்து கொண்டு இருந்தனர், அப்பொழுது தான்*

*பேதுரு சிறையில் இருந்து தப்பித்து அங்கு செல்கிறார் (**அப்போஸ்தலர் 12:12**).*

*இயேசுவின் மரணம் மற்றும் உயிர்தெழுதலுக்கு பின்பு எருசலேமில் நடந்த எல்லா காரியங்களிலும் மாற்குவின் பங்கு மிக இன்றியமையாதது.*

***கொலோசெயர் 4:10**, சொல்லுகிறது பர்னபாவும் மாற்குவும் சொந்தக்காரர்கள் (Cousins) என்று.*

***அப்போஸ்தலர் 13:2, அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்."***

*பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும் சவுலையும் அந்தியோகியாவிலிருந்து மிஷனரிகளாக நியமிக்கும்போது.*

***அப்போஸ்தலர் 13:5, சாலமி பட்டணத்தில் வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள். யோவானும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான்.***

*பர்னபாவும் சவுலும் யோவான் மாற்குவை தன்னுடைய உடன் ஊழியனாக கூட்டி செல்ல முடிவெடுத்தனர்.*
*ஆனால் குழு சிப்ரஸை விட்டு சென்ற பொழுது ஏதோ ஒன்று நடந்துள்ளது, எனவே பம்பிலியா நோக்கி சென்றனர்.*

*இது எதோ ஒரு முக்கியமான ஒன்று நடைபெற்றிருக்கவேண்டும், ஆனால் லூக்கா இதை ஒரே ஒரு சொற்றொடரில் தான் கூறி இருக்கிறார்.*

***அப்போஸ்தலர் 13:13, "பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தைவிட்டுக் கப்பல் ஏறிப் பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள். யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போனான்."***

*பவுலும் பர்னபாவும் தங்கள் மிஷனரி பயணத்தை மிகவும் வெற்றிகரமான பயணத்தை முடித்தார்கள்.*

*இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஜெருசலேம் கவுன்சில் புறஜாதியார் விருத்தசேதனம் செய்வதை குறித்தான காரியத்தை தீர்த்து வைத்தது.*

*இதற்கு பின்பு பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிற்கு திரும்பி வந்து கற்பிக்கவும் போதிக்கவும் துவங்கினர்.*

*தான் முதலாவது மிஷினரி ஊழியம் செய்த பகுதிக்கு திரும்ப சென்று பரிசுத்தவான்களை தைரியப்படுத்த இதுவே சரியான நேரம் என்று பவுல் நம்பினார்.*

***அப்போஸ்தலர் 15:36-40, 36. சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப்பார்ப்போம் வாரும் என்றான்.37. அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான்.38. பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான்.39. இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு***

***கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான்.40. பவுலோ சீலாவை தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு.***

*மாற்கு என அழைக்கப்பட்ட யோவானை பர்னபாஸ் தன்னோடு அழைத்து செல்ல விரும்பினார். பம்பிலியா நாட்டில் தன்னை விட்டு பிரிந்தவரை தன்னோடு அழைத்து செல்ல பவுல் விரும்பவில்லை.*

*பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையே ஒரு கடுமையான சச்சரவு, அவர்கள் ஒருவருக்கொருவர் பிரிந்தனர்.*

*பர்னபாஸ் மார்க்கை தன்னுடன் அழைத்துச் சென்று சைப்ரஸுக்குப் பயணம் செய்தார்.*

*பவுல் சீலாவை தெரிந்து கொண்டு, தேவ கிருபையினால் தன் சகோதரர்களிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றார்.*

*சபை பவுலின் பக்கம் இருந்ததை இந்த சம்பவம் காட்டுகிறது.* ***(அப்போஸ்தலர் 15:40)***

### கருத்து வேறுபாடு

*மற்றவர்களின் தோல்விகளுடன் பர்னபா பொறுமை காட்டுவதற்கான முதன்மையான நிகழ்வு இது. அவர் ஜான் மார்க்குக்கு மற்றொரு வாய்ப்பை வழங்க விரும்புகிறார், இப்போது அதை செய்ய விரும்புகிறார்.*

*பவுல் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.*
*கருத்து வேறுபாடு மிகவும் ஆழமானது, அதை தீர்க்க முடியவில்லை. இந்த இரண்டு வரமளிக்கப்பட்ட தேவனால் அழைக்கப்பட்ட மிஷினரிகள் இப்போது பிரிகின்றனர்,*

*அவர்களின் நட்பு 15 வருடங்களாக நிலைத்தது, அவர்கள் ஒருவருக்கொருவர் கடன்பட்டவர்கள். ஆனால் அவைகள் இப்போது பயனளிக்கவில்லை.*

***அவர்கள் இருவரில் யார் செய்தது சரி?***

*லூக்கா இங்கு ஒரு முக்கியமான ஒரு நபர். அவர் ஒருவர் பக்கமாக மட்டும் இருப்பதை விரும்பவில்லை. ஆனால் சபை பவுலின் பக்கமாக சாய்ந்தது என நமக்கு ஒரு துப்பு கிடைத்துள்ளது.*

*இதிலிருந்து நாம் பெறும் எண்ணம் என்னவென்றால், இரண்டு நல்ல மனிதர்களால் உடன்பட முடியவில்லை, அவர்களுடைய கூட்டணியில் பிளவு உண்டானது.*

*ஒரு இளம் வாலிப மிஷினரி தன்னுடைய முதல் பயணத்திலே முழுவதும் செய்து முடிக்காமல் பாதியிலேயே கைவிட்டால், "நீங்கள் விசுவாச பணிக்காக அவனுக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுங்கள், அதாவது 18 மாதங்கள் அவர் தன் தவறிற்கு வருந்திய பின்பு" என்று எந்த ஒரு சத்தியமும் சொல்லவில்லை, அதே நேரத்தில் அவர்களுக்கு உதவாமல் இருங்கள் என்றும் கூறப்படவில்லை.*

*வேதம் சொல்லுகிறது "கரைந்துபோன இதயம் கொண்டவர்களை தைரியப்படுத்துங்கள், பெலவீனனுக்கு உதவி செய்யுங்கள், எல்லாரிடமும் சாந்தமாய் இருங்கள்" என்று.*

*சபையில் உள்ள தலைவர்கள் நிந்தனை மற்றும் சோதனையை கடந்தவர்களாக இருக்க வேண்டும் என கொள்கைகள் நமக்கு உண்டு.*

- ✓ ஒரு கொள்கை தேவனின் இரக்கத்தின் மகிமையை வலியுறுத்துகிறது.
- ✓ இன்னோரு கொள்கை தேவனின் அழைப்பின் மகிமையை வலியுறுத்துகிறது.

- ➢ ஒரு கொள்கை தேவனின் அளவற்ற முக்கியத்துவத்தை பரைசாற்றுகிறது.
- ➢ இன்னோரு கொள்கை தேவனின் பரிசுத்த தன்மையை பரைசாற்றுகிறது.

நம்முடைய ஒரு சில முடிவுகள் வேதாகமத்தின் மூலம் வெளிப்படையாக ஆட்கொண்டதாக இருக்கும், நாம் முடிந்த வரை வேதத்தில் உள்ள கோட்பாடுகளை வாழ்க்கையில் முடிவெடுக்க உபயோகிக்க முயற்சிக்க வேண்டும்.

இது போன்ற சூழ்நிலையில் என்ன முடிவெடுக்க வேண்டும் என்று ஞானம் நமக்கு வழிகாட்டுகிறது?

பர்னபாஸ் மாற்குவின் தேவை மற்றும் திறனில் கவனம் செலுத்துவது நமக்கு தெரிகின்றது.
பவுல் சுவிசேஷத்தின் மேலுள்ள தாக்கம் மற்றும் ஊழியத்தின் தேவை மற்றும் சாத்தியக்கூறுகள் மேல் கவனம் செலுத்துவது நமக்கு தெரிகின்றது.

பெரும்பாலும் நம்முடைய வாழ்க்கையும் ஊழியமும் இப்படிப்பட்ட முடிவெடுத்தலை தான் சார்ந்தது! வேதத்தில் உள்ள கோட்பாடுகளை சூழ்நிலைகளுக்கு ஏற்றார் போல் நாம் எடுத்துக்கொண்டு காரியங்களை நடப்பிக்கலாம், முடிவெடுக்கலாம், ஆனால் அவைகள் வெளிப்படையாக வேதாகமத்தில் சொல்லப்படவில்லை.

*தேவன் எல்லா வகையான மக்கள் மற்றும் சூழ்நிலைகளை பயன்படுத்துவார்.*

### *3. சத்தியத்தின் மீதான உறவு*

*அறிதலின் மகனாகிய பர்னபா உறவிற்காக சத்தியத்தின் முக்கியத்துவத்தை மிகவும் பாதிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்டார்.*

*இன்றைய சபைகளில் இவை நடப்பதை நாம் காணமுடியும்.*

*தன்னுடைய மக்களுக்காக சொந்த மக்களுக்காக அவர்களோடு தோளோடு தோள் கொடுப்பது ஒரு பலமாக இருந்தாலும் அதுவே அவர்களுக்கு பலவீனமாக மாறும் வாய்ப்பு உள்ளது.*

*இதே தான் கலாத்தியர் 2:10-14 ல் அந்தியோகியா சபையில் நடந்தது.*

***பவுல் ஏன் மாயத்தனம் பண்ணுவதில் சிக்கவில்லை?***

*ஆனால் மிகவும் அனுபவம் வாய்ந்த முதிர்ந்த கிறிஸ்தவனான பர்னபா இந்த மாயம் பண்ணுவதில் சிக்குண்டார்.*

*எருசலேமிலிருந்து வந்த யூதர்களை போலவே ஒரு உணர்ச்சிவசத்தை பவுல் உணராமல் இருக்கலாம்?*

*ஊழியத்தில் பவுலின் நோக்கம் என்பது சுவிசேஷத்தை மையமாக வைத்தே இருந்தது. மற்றவர்களின் உணர்ச்சி மற்றும் கருத்துக்களை பற்றி பவுல் கவலைப்படவில்லை.*

***கலாத்தியர் 1:8, &10, 8. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன். 10. இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே***

*அப்போஸ்தலனாகிய பவுல் அன்று சுவிஷேசத்திற்கு என்று வைராக்கியமாய் நின்றது 20 நூற்றாண்டுகள் கழித்தும் சுவிசேஷம் நிலை நிற்கின்றது.*

*ஆனால் பர்னபா தான் மக்கள் மேல் வைத்திருந்த இரக்கம் மற்றும் பொறுமையினால் மற்றவர்களுடன் சேர்ந்து பிழை செய்தார்.*

*பிழை இழைத்து சுவிசேஷத்தின் உண்மை சீர்குலைந்ததை சகித்து கொண்டார். அவருடைய பலம் இப்பொழுது பலவீனமாக மாறியது.*

### *4. உங்கள் பழைய வாழ்க்கையை பற்றி பெருமை கொள்ளவேண்டாம்*

*பழைய வாழ்க்கையின் அனுபவம் மற்றும் பயன்கள் எதிர்கால வாழ்க்கைக்கு எந்த வித உத்தரவாதமும் தராது.*

***அப்போஸ்தலர் 11:24, அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனு மாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்***

*பர்னபா ஒரு நல்ல மனிதர், பரிசுத்த ஆவியினால் மற்றும் விசுவாசத்தால் நிறைந்தவர். தேவன் சபையில் அவரை வல்லமையாக பயன்படுத்தினார்.*

*ஆனால் கலாத்தியர் 2ல் சொல்லப்பட்டுள்ள காரியம் அவர் அந்தியோகியாவில் முழுமையாக பரிசுத்த ஆவியினால் நடத்தப்படவில்லை என்று காட்டுகின்றது. அவர் மனிதருக்கு பயந்து மாயத்தனம் செய்து சுவிசேஷத்தின் உண்மை களங்கப்பட்டதை சகித்துக்கொண்டார்.*

*இங்கு நாம் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள முடியும், நாம் யாரும் நம்முடைய கௌரவத்திற்காக வாழ கூடாது. நம்முடைய பழைய கால அனுபவம் மற்றும் வெற்றியை மட்டுமே சார்ந்து வாழக்கூடாது.*

*அதற்கு பதிலாக நாம் இயேசுவோடு கூட சேர்ந்து,*

- ✓ *நாம் சோதனைக்குப்படாதபடி விழித்து இருந்து ஜெபிப்போம்,*
- ✓ *தேவனின் எல்லா விதமான கவசங்களையும் நாம் அணிந்து கொண்டு சோதனை நாளில் நிலைத்து நிற்போம், மற்றும்*
- ✓ *அவருக்கு விரோதமாக பாவம் செய்யாதபடி அவருடைய வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் வைத்து வைப்போம்.*

*கிறிஸ்தவ வாழ்க்கை என்பது*

- ✓ *ஒரு ஓட்டப்பந்தயம், இதை ஓடி முடிக்கவேண்டும்,*
- ✓ *போராட்டம், போராடி ஜெயிக்க வேண்டும் மற்றும்*
- ✓ *விசுவாசத்தை கடைசிவரை காத்துக்கொள்ள வேண்டும்.*

*கடல் அலை போல் அடித்துக்கொண்டு போவது, காற்றினால் அடிக்கப்பட்டு போவது போல் அல்ல.*

***1 கொரிந்தியர் 9:26-27, 26. ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். 27. மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்***

***பிலிப்பியர் 3:13-14, 13. சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,14. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.***

### *5. தேவன் பேரில் நம்பிக்கையாய் இருங்கள் வெற்றி பெறுவீர்கள்*

*தேவன் மேலுள்ள நம்பிக்கை அவர் மக்களின் எல்லா பலவீனம் மற்றும் தோல்விகளை வெல்லும்.*

*பவுல் மற்றும் பர்னபாவின் வாழ்க்கையிலிருந்து மூன்று ஆதாரங்கள்*

***a) உடைக்கப்பட்டவை குணமாகும்.***

***1 கொரிந்தியர் 9:6, அல்லது, கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை?***

*பர்னபாவிடமிருந்து பிரிந்த சிறிது காலத்திற்கு பிறகு, பவுல் பர்னபாவை தனது வாழ்க்கையையும் உழைப்பையும்*

*பகிர்ந்து கொள்ளும் சக ஊழியராக குறிப்பிடுகிறார். மீறுதல் மன்னிக்கப்பட்டு காயம் ஆற்றப்பட்டது.*

***b) ஜான் மாற்கு பிரயோஜனமாக பயன்படுத்தப்பட்டார் 2 தீமோத்தேயு 4:11, லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்***

*பவுலின் கண்டிப்பு அவரை பிரயோஜனம் உள்ளவராய் மாற்றியதா?*
*அல்லது நற்செய்தியின் காரணத்திற்காக மாற்குவை காப்பாற்றிய பர்னபாவின் மென்மையான பொறுமை அவரை பிரயோஜனம் உள்ளவராய் மாற்றியதா?*
*அல்லது இரண்டும் இருக்கலாமா?*

*எதுவாக இருந்தாலும், அனைத்து கருத்துக்களையும் மீறி தேவன் அவருக்கு வெற்றியை கொடுத்தார். அவரை பவுலிற்கு பிரயோஜனம் உள்ளவராக மாற்றியது மட்டுமில்லாமல் பேதுருவுக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்து நமக்கு இரண்டாவது சுவிசேஷ புத்தகமான மாற்குவின் பார்வையில் சுவிசேஷம் என்ற புத்தகம் கிடைத்தது.*

***c) இருவரும் தங்கள் சொந்த வழிகளில் பயனுள்ளவராக இருந்தனர்***

*தன் மக்களின் தோல்விகளிலும் தேவன் அவர்களுக்கு வெற்றியை தருகிறார். அவர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடு ஒரு முடிவுக்கு வரவில்லை என்றாலும் எந்த மிஷினரியும் தன் ஊழியத்தை கைவிடவில்லை. அவர்களுக்கு ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளிலும், வேறு ஒரு உடன்*

*ஊழியரை தெரிந்தெடுத்து அவர்கள் ஊழியத்தை தொடர்ந்தனர், மற்றும் ஒரு தடுமாறும் மிஷனரி பயணத்தில் இரண்டு துடிப்பான மனிதர்கள் வெளிப்பட்டார்கள்.*

## *முடிவுரை*

*தேவன் இதை வரலாற்றில் பல முறை செய்துள்ளார். சாம்பல் போன்று தோல்வியில் துவண்டு போனவர்களை, காற்றை வீசி நெருப்பை மூட்டி அவர்களை தன் மகிமைக்காக அக்கினியாய் எழும்ப செய்கிறார்.*

*தேவ மக்களின் தோல்வி என்பது தற்காலிகமானதே. உடன்படிக்கை பெட்டி பெலிஸ்தியரின் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு இருக்கலாம். அனால் சூரியன் உதிக்கும் முன் அவருக்கு முன்பாக பெலிஸ்தியரின் கடவுளான* ***தாகோன்*** *(Dagon) விழுவான், தேவனின் எதிரிகளின் வெற்றியை கொடிய கட்டிகள் வாட்டும் (**1 சாமுவேல்** 5).*

*தேவ மக்களின் தோல்விகள் எப்பொழுதுமே தற்காலிகமானதே. தேவ மக்களின் எல்லா பெலவீனமும் தோல்வியும் தேவனால் வெற்றியாகும்.*

*எருசலேமில் உள்ள எல்லா சீஷரிலும் பர்னபாஸ் தனி நபராக நின்று, பவுலின் உபாத்திரவ வரலாற்றில் கூட இருந்து, அவர் முற்றிலும் மாற்றப்பட்ட கிறிஸ்தவன் என்று உறுதியாக காண்பிக்க அவருக்கு தருணம் தந்து உடன் இருந்தார்.*

*அதன் மூலமாக தேவன் வரலாற்றிலேயே மிகவும் சிறந்த மிஷினரி மற்றும் வேதபண்டிதரான பவுல் எனும் பெயர் கொண்ட நபர் சபைக்காக எழும்ப பர்னபாவை உபயோகப்படுத்தினார்.*